*(வலைபின்னல் மாற்றுமுறை)*

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

# *1999 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, சர்வதேச சாந்தி தர்ம ஒழுங்கமைப்பு (கூட்டிணைத்தல்) சட்டம்*

---

*(1999 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 30 ஆந் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.)*


*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*1999, திசெம்பர் மாதம் 03 ஆந் தேதிய* **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக்** குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*

*கொழும்பு 1, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.*

**விலை : ரூபா 7.75** **தபாற் செலவு : ரூபா 3.50**

**1999 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, சர்வதேச சாந்தி தர்ம ஒழுங்கமைப்பு (கூட்டிணைத்தல்) சட்டம்**

[*1999 ஆம் ஆண்டு நவெம்பர் 30 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.*]

*ச.வ.–ஓ.24/96.*

## சர்வதேச சாந்தி தர்ம ஒழுங்கமைப்பைக் கூட்டிணைப் பதற்கானதொரு சட்டம்

*“சர்வதேச சாந்தி தர்ம ஒழுங்கமைப்பு”* என அழைக்கப் படுவதும் அறியப்படுவதுமான ஒழுங்கமைப்பொன்று, அதன் உறுப்பினர் களால் இணங்கிக்கொள்ளப்பட்ட விதிகளுக்கிணங்க, சொல்லப்பட்ட ஒழுங்கமைப்புடன் தொடர்புபட்ட எல்லாக் கருமங்களையும், பயனுற நிறைவேற்றிக் கொண்டுநடாத்தும் நோக்கத்துக்கெனக் கொழும்பில் இதற்கு முன்னர் உருவாக் கப்பட்டிருந்ததாதலாலும் : *முன்னுரை.*

அத்துடன்சொல்லப்பட்ட ஒழுங்கமைப்பானது கூட்டிணைக்கப்பட விண்ணப்பித்துள்ளதாதலாலும், அத்தகைய விண்ணப்பத்தை அனுமதித்தல் பொதுமக்கள் நன்மைக்கானதாகவிருக்குமாதலாலும் :

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளு மன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :–

**1.** இச்சட்டம், 1999 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, சர்வதேச சாந்தி தர்ம ஒழுங்கமைப்பு (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். *சுருக்கப் பெயர்.*

**2.** இச்சட்டம் தொடங்கும் திகதியிலிருந்தும் அதன் பின்னரும் (இதனகத்துப்பின்னர் “ஒழுங்கமைப்பு” எனக் குறிப்பீடு செய்யப்படும்) சர்வதேச சாந்தி தர்ம ஒழுங்கமைப்பில் தற்போது உறுப்பினராகவுள்ள அல்லது இத்தால் அமைத்துருவாக்கப்படும் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களாக இதன் பின்னர் சேர்த்துக்கொள்ளப்படும் அத்தகை யோரான அத்தனை ஆட்களும் (இதனகத்துப்பின்னர் “கூட்டுத்தாபனம்” எனக் குறிப்பீடு செய்யப்படும்) “சர்வதேச சாந்தி தர்ம ஒழுங்கமைப்பு” என்னும் பெயர் மகுடத்தின்கீழ் இடையறாவழியுரிமைகொண்ட கூட்டிணைக்கப்பட்ட ஒருகுழுவாக இருத்தல் வேண்டும். கூட்டுத்தாபனம் அப்பெயர் கொண்டு எல்லா நீதிமன்றங்களிலும் வழக்குத் தொடுக்கலாமென்பதுடன் அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும் படலாம் ; அத்துடன் பொது இலச்சினையொன்றை வைத்திருக்கவும் பயன்படுத்தவும் அதன் தற்றுணிபின்படி அதை மாற்றவும் முழுத்தத்துவமும் அதிகாரமும் பெற்றதாயிருத்தல் வேண்டும். *சர்வதேச சாந்தி தர்ம ஒழுங்கமைப்பைக் கூட்டிணைத்தல்.*

கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்.

**3**. கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள் பின்வருவனவாயிருத்தல் வேண்டும் :–

(அ) எல்லா மக்களின் பிரிவினரிடையேயும் சர்வதேச சகோதரத்துவத்தை மேம்படுத்துதல்;

(ஆ) இன, மத, சமுதாய சமூகத்தை மேம்படுத்துவதிலும் சமூகத் தகுதியின்மைகளை ஒழிப்பதிலும் உதவி செய்தல் ;

(இ) மக்களிடையே சமாதானத்தையும் சுமுகத்தையும் நாடுவதில் உள்ளூர் மற்றும் வெளிநாட்டு ஒழுங்கமைப்புகளுடன் ஒத்துழைத்தல் ;

(ஈ) எல்லா மதங்களையும் எல்லாத் தத்துவஞான முறைமைகளையும் கற்பதை மேம்படுத்துதலும் ஊக்குவித்தலும் ;

(உ) மருத்துவமனைகள், மருந்தகங்கள், நோய் கண்டு பிடிப்பு நிலையங்கள், சமுதாய மண்டபங்கள் என்பவற்றை ஏற்பாடு செய்தலும், தாபித்தலும் அறக்கொடையளித்தலும், பேணுதலும் கட்டுப்படுத்தலும் முகாமைசெய்தலும் தேவையானவர்களுக்கு எம்முறையிலேனும் மருத்துவ நிவாரணத்தையும் உதவியையும் அளித்தலும் ;

(ஊ) மனிதகுலத்துக்கான அர்ப்பணிப்புக்கும் சேவைக்குமான வாழ்க்கைக்காகவும் பண்பாட்டைப் பரப்புவதற்காகவும் மாணவர்களுக்கும் மற்றும் வேறு ஆட்களுக்கும் பயிற்சியளித்தல் ;

(எ) சிறுகைத்தொழில்களில் மாணவர்களுக்குப் பயிற்சியளித்தலும் அவர்களைப் பயனுள்ள பிரசைகளாக நிலைநாட்டுவதற்கு அவர்களுக்கு நிதிவகையாக அல்லது வேறுவகையாக உதவுதலும் ;

(ஏ) அனாதை இல்லங்கள், சிறுவர் பூங்காக்கள், பண்பாட்டு நிலையங்கள், பாடசாலைகள் மற்றும் கல்லூரிகள் என்பவற்றை நிர்மாணித்தலும் பேணுதலும் நிருவகித்தலும் ;

(ஐ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களைப் பரப்புவதில் ஈடுபட்டுள்ள பிக்குகள், தொண்டர்கள் மற்றும் வேறு ஆட்கள் என்போருக்குப் புலமைப் பரிசில்கள் அல்லது அளிப்புகள் என்ற வகையாக அல்லது காசு அல்லது பொருள் உதவியாக உதவியளித்தல்;

(ஒ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை முன்னெடுத்துச் செல்வதற்காகக் கண்காட்சிகள், விரிவுரைகள், கருத்தரங்குகள், ஆய்வுகள், வேலைக்களங்கள், வகுப்புகள், விவாதங்கள், மாநாடுகள், உல்லாசப் பிரயாணங்கள், சுற்றுலாக்கள் அல்லது வேறேதேனும் செயற்பாடு என்பவற்றை மேம்படுத்துதலும், ஆயத்தஞ் செய்தலும், ஒழுங்குபடுத்தலும், நடாத்துதலும் ;

(ஓ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை நிறைவேற்று வதற்காக விரும்பத்தக்கனவெனக் கருதப்படக் கூடியவாறாக, நூலகங்களைத் தாபித்துப் பேணுதலும், புத்தகங்கள், சஞ்சிகைகள், நினைவுமலர்கள், பருவவிதழ்கள் என்பவற்றுக்காக ஒப்பப்பணஞ் செலுத்துதலும் அவற்றை வழங்குதலும், அத்துடன் அத்தகைய ஏனைய சேவைகளை ஏற்பாடுசெய்து பேணுதலும் ;

(ஔ) புலமைப்பரிசில்கள், அளிப்புகள், மானியக் கொடைகள், பரிசில்கள் என்பவற்றை நிறுவுதலும், தாபித்தலும், ஆத்மீக, தத்துவஞான, பண்பாட்டுக் கற்கைகளை ஊக்குவித்தலும் ;

(க) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களையொத்த குறிக்கோள்களை உடைய ஏனைய கழகங்களுடனும், சங்கங்களுடனும் ஒழுங்கமைப்புகளுடனும் ஒத்துழைத் தலும் இணைந்து செயலாற்றுதலும் ;

(ங) இலங்கையில் அல்லது வெளிநாடுகளில் நடை பெறும் மத, தத்துவஞான, பண்பாட்டு அல்லது சமாதான மாநாடுகளுக்குப் பேராளர்களை அனுப்புதல் ;

(ச) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை எய்துவதற்கு அவசியமான, உகந்தனவான அல்லது அதன் இடைநேர்விளைவான அல்லது அவசியமாகக் கூடிய, உகந்ததாகக்கூடிய அல்லது அதன் இடைநேர் விளைவாகக்கூடிய அத்தகைய மற்றெல்லாக் காரியங்களையும் பொதுவாகச் செய்தல்.

கூட்டுத்தாபனத்தின் தத்துவங்கள்.

4. இச்சட்டத்தினதும் வேறேதேனும் எழுத்திலான சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கு அமைய, கூட்டுத்தாபனம் பின்வரும் தத்துவங்களைக் கொண்டிருத்தல் வேண்டும் :-

(அ) கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களுக்காக அவசியமாகக்கூடியவாறான அத்தகைய அலுவலர்களையும் சேவையாளர்களையும் நியமித்தலும், அவர்களுக்கு ஊதியமளித்தலும், அவர்கள் மீது ஒழுக்காற்று கட்டுப்பாட்டைப் பிரயோகித்தலும் ;

(ஆ) எவரேனுமாளிடமிருந்து அல்லது கூட்டிணைக்கப்பட்ட அல்லது வேறுவகையான ஆட்கள் குழுவிடமிருந்து ஏதேனும் உதவியை மானியக் கொடையை அல்லது கொடையைக் காசாக அல்லது பொருளாகப் பெறுதலும் அல்லது சேகரித்தலும் ;

(இ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களுள் எல்லா வற்றையும் அல்லது எவற்றையும் எய்தும் நோக்கத்துக்காக வெளிநாடுகளில் கூட்டுத்தாபனத்தின் கிளை ஒழுங்கமைப்புகளைத் தாபித்தல் ;

(ஈ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை முன்னெடுத்துச் செல்வதற்காகப் பணம் கடன் பெறுதலும் அல்லது திரட்டுதலும். அவ்வாறு கடனாகப் பெறப்பட்ட அல்லது திரட்டப்பட்ட பணத்தின் கொடுப்பனவை உறுதிப்படுத்துவதற்கு ஏதேனும் ஈட்டை அல்லது முறியை எழுதி நிறைவேற்றுதலும் ;

(உ) ஒன்றில் நேரடியாகவோ அல்லது அதற்கெனக் கூட்டுத்தாபனத்தினால் அதிகாரமளிக்கப்பட்ட அதன் அலுவலர்கள் அல்லது சேவையாளர்கள் அல்லது முகவர்கள் மூலமாகவோ கூட்டுத்தாபனத்தின் தத்துவங்களையும் பணிகளையும் கடமைகளையும் பிரயோகிப்பதற்கும், நிறைவேற்றுவதற்கும், புரிவதற்கும் அல்லது கூட்டுத்தாபனத்தின் அலுவல்களைக் கொண்டுநடாத்துவதற்கும் அல்லது அதன் குறிக்கோள்களை முன்னேடுத்துச் செல்வதற்கும் அவசியமாகக்கூடியவாறான அத்தகைய எல்லா ஒப்பந்தங்களையும் உடன்படிக்கைகளையும் செய்துகொள்ளுதலும் அல்லது புரிதலும் ;

(ஊ) இச்சட்டத்தின் 3 ஆம் பிரிவில் தரப்பட்டுள்ள குறிக்கோள்களை எய்துவதற்கு அவசியமாகக் கூடியவாறான அத்தகைய எல்லாச் செயல்களையும் அல்லது காரியங்களையும் செய்தல் ;

கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை நிருவகித்தல்.

**5**. (1) கூட்டுத்தாபனத்தின் அலுவல்கள், அப்போதைக்கு வலுவிலுள்ள கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமையப் பதவி தாங்குநர்களையும் அத்தகைய விதிகளில் ஏற்பாடு செய்யப்படக் கூடியவர்களுமான அத்தகைய வேறு ஆட்களையும் கொண்ட முகாமைச்சபையினால் நிர்வகிக்கப்படுதல் வேண்டும்.

(2) இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் முரணாகி எது எவ்விதமிருப்பினும், ஒழுங்கமைப்பின் தாபகர் வணக்கத்துக்குரிய பெல்பொல விபஸ்ஸி தேரோ கூட்டத்தாபனத்தின் தலைவராகவிருத்தல் வேண்டும்.

(3) கூட்டுத்தாபனத்தின் முதலாவது முகாமைச்சபையானது இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு முந்திய தினத்தன்று பதவி தாங்கும் ஒழுங்கமைப்பின் முகாமைச்சபையாதல் வேண்டும்.

கூட்டுத்தாபனம் அசைவுள்ளதும் அசைவற்றதுமான ஆதனத்தை வைத்திருக்கலாம்.

**6**. இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய, ஏதேனும் கொள்வனவு, மானியக்கொடை, கொடை, மரணசாதனக் கையளிப்பு என்பன மூலமாகவோ அல்லது வேறுவகையாகவோ அதற்குரித்தாக்கப்படும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனம் எதனையும் பெறவும் வைத்திருக்கவும் கூட்டுத்தாபனம் சட்டப்படி இயலுமானதாதலும் ஆற்றலுடையதாதலும் வேண்டும் என்பதுடன், அத்தகைய ஆதனம்யாவும் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகவும் அப்போதைக்கு வலுவிலுள்ள கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமையவும், அவற்றை விற்க, ஈடுவைக்க, குத்தகைக்குக் கொடுக்க, கொடுத்துமாற்ற அல்லது வேறு வகையில் கையாள உள்ள முழுத்தத்துவத்துடனும் கூட்டுத்தாபனத்தினால் வைத்திருக்கப்படலும் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் விதிகள்.

**7**. (1) உறுப்பினர்களின் பொதுக்கூட்டம் எதிலும் சமுகமாயிருந்து வாக்களிக்கும் உறுப்பினர்களில் மூன்றிலிரண்டுக்குக் குறையாதோரின் வாக்குப்பெரும்பான்மை கொண்டு, உறுப்பினர்களைச் சேர்த்தல், மீளப்பெறுதல் அல்லது விலக்குதல்,

பதவிதாங்குநர்களையும் முகாமைச்சபையையும் தேர்ந்தெடுத்தல் என்பவற்றுக்காகவும் அத்துடன் வேறுவகையில் பொதுவாகக் கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்வதற் காகவும். அதன் குறிக்கோள்களை எய்தப் பெறுவதற்காகவும் கூட்டுத்தாபனத்தின் தலைவரின் பதவியிலான ஏதேனும் வெற்றிடத்தினை நிரப்புவதற்கு ஏற்பாடு செய்கின்ற விதிகளுக் குட்பட இச்சட்டத்தினதும் வேறேதேனும் எழுத்திலான சட்டத் தினதும் ஏற்பாடுகளுக்கு ஒவ்வாதனவாகவிராத விதிகளைக் காலத்துக்குக்காலம் ஆக்குதல் கூட்டுத்தாபனத்திற்குச் சட்ட முறையானதாதல் வேண்டும். அத்தகைய விதிகள் ஆக்கப் பட்டதும், அதேபோன்ற கூட்டமொன்றில் அதேமுறையில் அவை மாற்றப்படலாம். அவற்றிற்குச் சேர்த்துக்கொள் ளப்படலாம். அவை திருத்தப்படலாம் அல்லது இல்லாதொழிக் கப்படலாம்.

(2) இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு முந்தியநாளன்று வலுவிலுள்ள ஒழுங்கமைப்பின் விதிகள், அவை இச்சட்டத்தின் அல்லது வேறேதேனும் எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடு களுக்கு ஒவ்வாதனவாகவிராத அளவுக்கு இப்பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட கூட்டுத்தாபன விதிகளெனக் கருதப்படுதல் வேண்டும்.

(3) கூட்டுத்தாபன உறுப்பினர்கள் கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கு அமைந்தோராதல் வேண்டும்.

ஒழுங்கமைப்பினால் செலுத்தப்பட வேண்டியனவும் ஒழுங்கமைப்புக்குச் செலுத்தப்படற் பாலனவுமான தனிசுகள்.

**8**. இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர்முந்திய நாளன்று ஒழுங்கமைப்புக்குள்ள எல்லாதத் தனிசுகளும் பொறுப்புகளும் கூட்டுத்தாபனத்தினால் செலுத்தப்படுதல் வேண்டுமென்ப துடன், அந்நாளன்று ஒழுங்கமைப்புக்கு வருமதியாகவுள்ள எல்லாத் தனிசுகளும், செலுத்தப்படற்குரிய ஒப்பப்பணங்கள் உதவுதொகைகள் ஆகியனவும் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகக் கூட்டுத்தாபனத்திற்குச் செலுத்தப்படலும் வேண்டும்.

**9**. கூட்டுத்தாபனத்தின் இலச்சினையானது கூட்டுத்தாபனத் தலைவரின் கட்டுக்காப்பில் வைத்திருக்கப்படுதல் வேண்டு மென்பதுடன், அத்தகைய தலைவரினதும் கூட்டுத்தாபனத்தின் அப்போதைக்கு வலுவிலுள்ள விதிகளில் ஏற்பாடு செய்யப்படக்கூடிய அத்தகைய எண்ணிக்கையினரான ஆட்களினதும் முன்னிலையிலன்றி எத்தகையதுமான சாதனம் எதிலும் பொறிக்கப்படலுமாகாது. அவர்கள் தாம் சமுகமாயிருந்ததற்கு அடையாளமாக அச்சாதனத்தில் தமது பெயர்களை எழுதிக் கையொப்பமிடுதல் வேண்டும். அவ்விதம் கையொப்பமிடுதலானது எவரேனும் ஆள் சாட்சிக்காரராகக் கையொப்பமிடுவதினின்றும் தனிவேறானதாதல் வேண்டும். *கூட்டுத்தாபனத்தின் இலச்சினை.*

**10**. (அ) கூட்டுத்தாபனத்தின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாகவிருத்தல் வேண்டும். *கணக்காய்வும் கணக்குகளும்.*

(ஆ) கூட்டுத்தாபனமானது அதன் வருமானம் மற்றும் செலவினம், சொத்துக்களும் பொறுப்புகளும் அத்துடன் கூட்டுத்தாபனத்தின் மற்றெல்லாக் கொடுக்கல் வாங்கல்கள் பற்றிய முறையான கணக்குகளை வைத்திருக்கச் செய்வித்தல் வேண்டும்.

(இ) கூட்டுத்தாபனத்தின் கணக்குகள் ஒரு தகைமைபெற்ற கணக்காய்வாளரினால் கணக்காய்வு செய்யப்படல் வேண்டும்.

இப்பிரிவில் "தகைமைபெற்ற கணக்காய்வாளர்" என்பது -

(i) இலங்கைப் பட்டயக்கணக்காளர் நிறுவகத்தின் உறுப்பினராகவுள்ள அல்லது சட்டத்தினால் தாபிக் கப்பட்ட வேறேதேனும் நிறுவகத்தின் உறுப்பின ரொருவராகவும், அத்தகைய நிறுவகத்தின் பேரவை யினால் கணக்காளர் ஒருவராகத் தொழில்புரிவதற்காக வழங்கப்பட்ட சான்றிதழொன்றைக் கொண்ட வராகவுள்ள தனியாள் ஒருவர்; அல்லது

(ii) கணக்காளர் குழுமமொன்றின் வதியும் பங்காளர் ஒவ்வொருவரும் இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் உறுப்பினர் ஒருவராக அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறேதேனும் நிறுவகத்தின் உறுப்பினரொருவராகவும். அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் கணக்காளர் ஒருவராகத் தொழில் புரிவதற்காக வழங்கப்பட்ட சான்றிதழொன்றைக் கொண்டவராகவும் இருக்கின்றதான கணக்காளர் குழுமம் ஒன்று.

என்று பொருள்படும்

*குடியரசினதும் மறுபேரினதும் உரிமைகளைப் பேணல்.*

**11.** இச்சட்டத்தில் அடங்கியுள்ளது எதுவும், குடியரசினது உரிமைகளையேனும் அல்லது ஏதேனும் அரசியல் அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவினது உரிமைகளையேனும் அல்லது இச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டவர்களும், அவர்களிலிருந்து, அவர்கள்மூலம் அல்லது அவர்களின்கீழ் உரிமைகோருபவர்களும் தவிர்ந்த ஏனையோரின் உரிமைகளையேனும் பங்கப்படுத்துதலோ பாதித்தலோ ஆகாது.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்*

**12.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையில் ஏதேனும் ஒவ்வாமை ஏற்படுகின்ற விடயத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387: (வெளிநாடு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர். அரசாங்க வெளியீட்டலுவலகம், இல.32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ்ரோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.*